අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන සහ වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு
Ministry of Education, Higher Education and Vocational Education
'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112785818
info@moe.gov.lk www.moe.gov.lk

මගේ යොමුව / எனது இல. / My Ref. ED/2/29/18/27/01 — ඔබේ යොමුව / உமது இல. / Your Ref. — දිනය / திகதி / Date 2026.06.

அனைத்து மாகாண பொது சேவை ஆணைய செயலாளர்கள்

அனைத்து மாகாண கல்வி செயலாளர்கள்

அனைத்து மாகாண கல்வி பணிப்பாளர்கள்

அனைத்து வலய கல்வி பணிப்பாளர்கள்

**ஆசிரியர் ஆலோசனை சேவையின் முதல் வினைத்திறன் தடைதாண்டல் சம்பந்தமானது**

கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சினால் 2025.10.28 ஆம் திகதியன்று வெளியிடப்பட்ட 32/2025 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 5 ஆம் பிரிவின்படி, ஆய்வு அறிக்கைகளை மதிப்பீடு செய்யும் குழுவினால், நிர்ணயிக்கப்பட்ட அளவுகோல்களுக்கு இணங்காத வகையில் தயாரிக்கப்பட்டுள்ளதாக அடையாளம் காணப்படும் அறிக்கைகள் தொடர்பாக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்துக் குறிப்பிடும், அச்சுற்றறிக்கையின் 06 ஆம் பிரிவின் பிரகாரம், வினைத்திறன் தடைதாண்டல்_____பரீட்சையை நடாத்துவதற்காக வெளியிடப்பட்ட கால அட்டவணையைப் பின்வருமாறு திருத்தியமைக்கின்றேன்.

**I. ஆய்வு ஒப்படையை தயாரித்துச் சமர்ப்பித்தல் தொடர்பான கால அட்டவணை**

| தொடர் இலக்கம் | விடயம் | காலம் |
|---|---|---|
| 01. | ஆய்வு முன்மொழிவைக் குழுவிடம் சமர்ப்பித்து அனுமதி பெறுதல் | 2025.11.01 முதல் 2025.11.30 வரை (01 மாதம்) |
| 02. | ஆய்வு ஒப்படையைத் தயாரித்துக் குழுவிடம் சமர்ப்பித்தல் | 2025.12.01 முதல் 2026.11.30 வரை (12 மாதங்கள்) |
| 03. | ஆய்வுத் ஒப்படைகளை மதிப்பீடு செய்துகுழுவின் பரிந்துரைகளை வழங்குதல் | 2026.12.01 முதல் 2027.02.28 வரை (03 மாதங்கள்) |
| 04. | உரிய அளவுகோல்களுக்கு இணங்க அமையாத ஆய்வு அறிக்கைகளை மீண்டும் அதிகாரியிடம் ஒப்படைத்தல் | 2027.03.01 முதல் 2027.03.31 வரை (01 மாதம்) |
| 05. | உரிய அளவுகோல்களுக்கு இணங்க அமையாத ஆய்வு அறிக்கைகளை மீண்டும் உரிய அளவுகோல்களின்படி தயாரித்துச் சமர்ப்பித்தல் | 2027.04.01 முதல் 2027.06.30 வரை (03 மாதங்கள்) |
| 06. | இறுதி ஆய்வு அறிக்கையை மதிப்பீடு செய்து பரிந்துரைகளை வழங்குதல் | 2027.07.01 முதல் 2027.09.30 வரை (03 மாதங்கள்) |

ගරු අමාත්‍යතුමිය / கௌரவ அமைச்சர் / Hon. Minister: +94112784832, Fax +94112784825, minister.education@moe.gov.lk
ලේකම් / செயலாளர் / Secretary: +94112784811, Fax +94112785162, secretary.education@moe.gov.lk, moesecretaryoffice@gmail.com

II. மேற்கூறிய கால அட்டவணையின்படி இலக்கம் 03, 04 மற்றும் 06 இன் பிரகாரம் ஆய்வு ஒப்படைகளைப் பொறுப்பேற்றல் மற்றும் குழு கூடி தீர்மானங்களை வெளியிடுதல் சம்பந்தமாக மாகாண கல்விப் பணிப்பாளரினால் திணைக்கள மட்டத்தில் பொருத்தமான ஒரு பொறிமுறை தயாரிக்கப்பட வேண்டும்.

III. அதற்கமைய, ஆய்வுத் ஒப்படைகளைத் தயாரித்து மாகாண கல்விப் பணிப்பாளரிடம் சமர்ப்பிக்கும் போது விண்ணப்பதாரர் இணைப்பு 01 படிவத்தைப் பயன்படுத்த வேண்டும்.

IV. மேற்குறிப்பிட்ட கால அட்டவணையின் உப இலக்கம் 02 மற்றும் 05 இன் படி மாகாண கல்விப் பணிப்பாளரிடம் ஒப்படைக்கப்படும் ஆய்வு ஒப்படைகளை பொறுப்பேற்கப்பட்டது என்பதற்கான இணைப்பு 01 படிவத்தின் II ஆம் பகுதியைப் பூர்த்தி செய்து மாகாண கல்விப் பணிப்பாளரினால் வழங்கப்பட வேண்டும் என்பதுடன், விண்ணப்பதாரர் அதனைத் தனது தனிப்பட்ட கோப்பில் உள்ளடக்க வேண்டும்.

V. மாகாண கல்விப் பணிப்பாளரினால் மேற்கூறிய கால அட்டவணையின் உப இலக்கம் 04 இன் படி, மீண்டும் தயாரித்துச் சமர்ப்பிக்குமாறு தீர்மானிக்கப்படும் ஆய்வு ஒப்படைகள் இணைப்பு 02 படிவத்தின் பிரகாரம் விண்ணப்பதாரருக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என்பதுடன், விண்ணப்பதாரர் உரிய காலப் பகுதிக்குள் மீண்டும் தயாரித்து இணைப்பு 01 படிவத்தின் ஊடாக மீண்டும் குழுவின் மதிப்பீட்டிற்காக ஒப்படைக்க வேண்டும்.

2. மேற்கூறிய 01. II இன் பிரகாரம் மாகாண கல்விப் பணிப்பாளரிடம் அந்தந்த வலயத்திற்குரிய அதிகாரிகளினால் மதிப்பீட்டிற்காக அனுப்பப்படும் ஒப்படைகள் மற்றும் அவை தொடர்பான இறுதி மதிப்பீடுகளைக் கொண்ட இணைப்பு 03 இன் பிரகாரமான அறிக்கை ஒன்றை 2027.11.30 ஆம் திகதிக்கு முன்னர் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சுக்கு ஒரு பிரதியுடன், அந்தந்த மாகாணத்தினுள் அமைந்துள்ள அனைத்து வலயக் கல்வி அலுவலகங்களுக்கும் மாகாண கல்விப் பணிப்பாளரினால் அனுப்பி வைக்கப்பட வேண்டும் என்பதுடன், அந்த அறிக்கைகளை வலயக் கல்விப் பணிப்பாளர் ஆசிரியர் ஆலோசகர் சேவை அதிகாரிகளின் பதவியுயர்வு தொடர்பான பணிகளின் போது முதலாவது வினைத்திறமைக்காண் தடைத்தாண்டல் முடிவுகளை உறுதிப்படுத்துவதற்காகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

3, அதற்கமைய, மேலே குறிப்பிடப்பட்ட விடயங்கள் தவிர்ந்த 32/2025 இலக்கச் சுற்றறிக்கையின் ஏனைய அனைத்து விடயங்களும் மாற்றமின்றி அப்படியே இருக்கும்.

நாலக கலுவெவ

செயலாளர்

இணைப்பு 01

பகுதி I

(உத்தியோகத்தரின் பெயர்): ....................................................
(உத்தியோகத்தரின் பதவி): ....................................................
(வலயம்): ....................................................................
மாகாண கல்விப் பணிப்பாளர்,
........................ மாகாணம்.

**ஆசிரியர் ஆலோசகர் சேவையின் முதலாவது வினைத்திறன்காண் தடைத்தாண்டல் பரீட்சை – ஆய்வு ஒப்படையை ஒப்படைத்தல் / ........................ திகதியிட்ட அறிவித்தலின் பிரகாரம் திருத்தி மீண்டும் ஒப்படைத்தல் (பொருத்தமற்ற கூற்றை வெட்டிவிடவும்)**

இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட 2182/36 இலக்க மற்றும் 2020.07.01 திகதிய ஆசிரியர் ஆலோசகர் சேவைப் பிரமாணக் குறிப்பின் 08 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, ஆசிரியர் ஆலோசகர் சேவையின் தரம் II அதிகாரி ஒருவரினால் பூர்த்தி செய்யப்பட வேண்டிய வினைத்திறன்காண் தடைத்தாண்டல் பரீட்சைக்கு அமைவாக என்னால் சமர்ப்பிக்கப்படும் ........................................................................ (ஆய்வு ஒப்படையின் பெயர்) எனும் ஆய்வு ஒப்படையை மதிப்பீட்டுக் குழுவிடம் இத்துடன் ஒப்படைக்கின்றேன்.

கையெழுத்து :- ..................................

தொலைபேசி எண் :- ..................................

திகதி :- ..................................

........................................................................................................................................................

**உத்தியோகத்தரின் தனிப்பட்ட கோப்பிற்கு அனுப்பப்படும் பிரதி**
**பகுதி II**

வலயக் கல்விப் பணிப்பாளர்,

(வலயம்) ......................................

........................................................................................ (உத்தியோகத்தரின் பெயர், பதவி, வலயத்தின் பெயர்) என்பவரால் ............................................................................ எனும் பெயரில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ...... பக்கங்களைக் கொண்ட (...... மாத) ஆய்வு ஒப்படை / மீண்டும் தயாரிக்கப்பட்ட ஒப்படை மதிப்பீட்டிற்காகப் பொறுப்பேற்கப்பட்டது.

........................................................ (கையெழுத்து)
மாகாண கல்விப் பணிப்பாளர் அல்லது அவரால் பெயரிடப்பட்ட அதிகாரி
திகதி :- ..................................

அலுவலக முத்திரை :-

இணைப்பு 02

(உத்தியோகத்தரின் பெயர்): ..............................................................
(உத்தியோகத்தரின் பதவி): ............................................................
(வலயம்): ..............................................................................

**ஆசிரியர் ஆலோசகர் சேவையின் முதலாவது வினைத்திறமைக்காண் தடைத்தாண்டல் பரீட்சை**

......(திகதி)...... அன்று உங்களால் எங்களிடம் ஒப்படைக்கப்பட்ட ........................................................................................ (ஒப்படை பெயர்) எனும் தலைப்பிலான ஆய்வு ஒப்படை கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் 32/2025 சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அளவுகோல்களுக்கு இணங்க அமையவில்லை என்பதால், அந்த அளவுகோல்களின்படி மீண்டும் தயாரித்துச் சமர்ப்பிப்பதற்காக இத்துடன் உங்களிடம் ஒப்படைக்கின்றேன்.

02. மேலும் ஆய்வு ஒப்படையில் உள்ளடக்கப்பட வேண்டிய விடயங்கள் குறித்த குழுவின் அவதானிப்புகள் / பரிந்துரைகள் சுருக்கமாக:

i. ..............................................................................................
ii. ..............................................................................................
iii. ..............................................................................................

03.அதற்கமைய, மேலே 02 ஆம் பந்தியின் அவதானிப்புகள் / பரிந்துரைகளுக்கு இணங்க பூர்த்தி செய்யப்பட்ட ஆய்வு ஒப்படையை உரிய திகதிக்குள் பூர்த்தி செய்து என்னிடம் மீண்டும் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்குமாறு தயவுடன் அறியத்தருகின்றேன்.

.........................................................................

மாகாண கல்விப் பணிப்பாளர் / சார்பில்

திகதி :-

பிரதி - வலயக் கல்விப் பணிப்பாளர், ........................ வலயம் - உத்தியோகத்தரின் தனிப்பட்ட கோப்பில் உள்ளடக்குவதற்காக.

இணைப்பு 03

(இரகசியமானது)

வலயக் கல்விப் பணிப்பாளர் (.......................வலயம்) அவர்கட்கு,

ஆசிரியர் ஆலோசகர் சேவையின் 2027.11.30 ஆம் திகதிக்கு முந்தைய முதலாவது வினைத்திறன்காண் தடைத்தாண்டல் பரீட்சையின் இறுதி மதிப்பீட்டு அறிக்கையின்படி உங்களது வலயத்தில் பணிபுரியும் உத்தியோகத்தர்களின் பெறுபேற்றுப் பட்டியல் கீழே உள்ள இணைப்பு I இன் மூலம் சமர்ப்பிக்கின்றேன்.

**இணைப்பு I**

| தொடர் இல. | உத்தியோகத்தரின் பெயர் | தேசிய அடையாள அட்டை இல. | ஆய்வுத் ஒப்படையின் பெயர் | ஆய்வுத் திட்டக் கட்டுரை குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது | | அனுமதி வழங்கப்பட்ட திகதி |
|---|---|---|---|---|---|---|
| | | | | ஆம் | இல்லை | |
| | | | | | | |

............................................................

மாகாண கல்விப் பணிப்பாளர்

திகதி :-

பிரதி :- செயலாளர், கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு - தகவல் அறிவிற்காக.